75—

வடலூரில் தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை கட்டுதல்

***33153**—திரு. கு. சிவசுப்பிரமணியன்:*

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறிஞ்சிப்பாடி தொகுதி, வடலூரில் தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டித் தரப்படும்?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழாது.

திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆல மரம்போல நீ வாழ,- அங்கே ஆயிரம் பறவைகள் இளைப்பாற'

என்றான் கவிஞன்.

'செய்யத் தெரிந்தவர் சாதிக்கிறார்
செய்யத் தெரியாதவர் போதிக்கிறார்'

என்றான் கர்னல் கீல் என்ற கவிஞன். அதைப் போல இன்று எங்கள் இதய தெய்வம், பாரதத்தின் புதுமைப் பெண், மனித நேயத் தலைவி, தமிழகத்தின் காவல் தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எங்களது வள்ளலார் மாவட்டத்திற்கு வந்திருந்து, எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க என்ற வள்ளலாருடைய கோட்பாடுக்கிணங்க எங்களுடைய வள்ளலார் மாவட்டம் சிதம்பரத்தில் ஏழை பாட்டாளிகள், தொழிலாளிகள், விவசாயக் கூலிகள், வாழ்க்கையிலே நலிவுற்றவர்களுக்கு ஒன்றல்ல, இரண்டல்ல, ஓராயிரத்து இருநூறு இல்லத்து திருமணங்களை (மேசையைத் தட்டும் ஒலி) தன் வீட்டுத் திருமணமாகத் தாலி எடுத்துக் கொடுத்துத் தன்னுடைய அமைச்சர் பெருமக்களோடும், பேரவைத் தலைவரோடும் வந்திருந்து வாழ்த்தியதற்காக முதற்கண் நன்றி கூறிக் கொள்ள விரும்புகிறேன். 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்று சொல்லிய

1995 நவம்பர் 9]

வள்ளலார் வாழ்ந்த பூமியில் வடலூரிலே அடுத்த நிதியாண்டிலாவது தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை கட்டித்தர நம்முடைய அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிஞ்சிப்பாடி தொகுதி, வடலூரில் 2 மருத்துவர்கள் உள்ள மருந்தகம் ஒன்று 1-11-1970 முதல் இயங்கி வருகிறது. அதன்மூலம் 571 ஈட்டுறுதித் தொழிலாளர்கள் தற்போது பயனடைந்து வருகின்றனர். 13,500-க்கு குறையாத ஈட்டுறுதித் தொழிலாளர்கள் உள்ள பகுதியில் மட்டுமே தொழிலாளர் மருத்துவமனை கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1970 ஆம் ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாணவர் அணியிலே இருந்து, மாவட்டச் செயலாளராக ஆகி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மாநிலப் பொதுச் செயலாளராக இருந்தபோது என்னோடு பணியாற்றியவர்கள். அவர்களுடைய செயல்திறனை அறிந்து நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு அவரைத் தொழிலாளர் நலத் துறை அமைச்சராக ஆக்கியிருக்கிறார்கள். என்னுடைய பகுதியிலே சேஷசாயி நிறுவனமும், நைசர் இண்டியா லிமிடெட் என்ற நிறுவனமும் இருந்துகொண்டு இருக்கின்றன. அந்த நிறுவனங்களிலே நிறையத் தொழிலாளர்கள் பணிபுரிகின்ற காரணத்தினால், இந்தத் தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை ஒன்றைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இன்றைக்கு நம்முடைய மாநிலத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்ற ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு என்பதையும் இத்திட்டத்தின் கீழ் பயனடைகின்ற மொத்த தொழிலாளர்கள் எத்தனை பேர் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 7 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளும், 158 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர்

புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு 13 மருந்தகங்களும் ஒரு மருத்துவமனையும் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன. சென்னை, கே.கே. நகரில் உள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை புதுடில்லி தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகத்தின்கீழ் நேரடியாகச் செயல்பட்டு வருகின்றது. ஈ.எஸ்.ஐ. திட்டத்தின் மூலம் பயனடையும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 9,17,620 பேர். ஈ.எஸ்.ஐ. திட்டத்தின் மூலம் பயனடையும் தொழிலாளர் குடும்ப நபர்களின் எண்ணிக்கை 35,60,365 பேர். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் புதிதாக 32,162 தொழிலாளர்களுக்கு இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளதால் 1,24,780 பேர் பயனடைந்து வருகின்றனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 76, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

76—

ஆரம்ப நிலவள வங்கிகளை மேம்படுத்த நிதி உதவி

****38271—டாக்டர் பெ. வீரபாண்டியன்:***

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரம்ப நிலவள வங்கிகளை மேம்படுத்த ஏதேனும் நிதியுதவி "நாபார்டு" (NABARD) மூலம் பெறப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) "நாபார்டின்" தேசிய கிராமக்கடன் நீண்டகால இயக்க நிதியிலிருந்து இதுவரை 198.49 இலட்ச ரூபாய் கடனாகப் பெற்று பிரமத நிலவள வங்கியின் மூலமாகப் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்துள்ளது.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கிகள் கோழிப் பண்ணை அமைக்கவும்,